ESCR | Newsletter

ISSUE 11, OCTOBER 2014

# அகதிகள் யார் ?



Photo : Steve Gumaer

அகதிகளின் சர்வதேச பிரசன்னத்தை, உலகின் வரலாறு முழுவதிலும், அனைத்து மதங்கள் மற்றும் கலாச்சாரங்களிலும் காண முடியும். ஒரு இளம் சிறுவனாக இருக்கையில், ஏரோது அரசனால் சிறுவர்கள் படுகொலை செய்யப்படுவதிலிருந்து தப்பிப்பதற்காக யேசு எகிப்தை விட்டுத் தப்பியோடியதாக, நான் கற்றிருக்கிறேன். பின்னர், யேசு 10 வருடங்களுக்கும் மேலாக அகதியாக இருந்தாரெனவும், மற்றும் அவரது சகோதரர்கள் அகதிப் பிள்ளைகளாகவே பிறந்தார்கள் எனவும் நான் அறிந்து கொண்டேன். கோட்டை நகரங்கள், ஓய்வு வருடம் மற்றும் புகலிடம் என்பன அகதிகளின் வாழ்க்கை தொடர்பாக பைபிள் வெளிப்படுத்தும் சில எண்ணக் கருக்களாகும். இந்து மதமும் மற்றும் மகாபாரதமும் பல்வேறு நிலைமைகளில் ஆட்கள் அடைக்கலம் தேடியதைக் குறிப்பிடுகிறது. இஸ்லாமின் புனித குரான் அகதிகள் பற்றி வெளிப்படையாகவே பின்வருமாறு கூறுகிறது: “நம்பிக்கையற்றவர்கள் யாரேனும் உங்களது பாதுகாப்பை நாடினால், உடனடியாகவே அவனுக்கு பாதுகாப்பைக் கொடுங்கள், அதன் மூலம் அவன் அல்லா என்ற வார்த்தையைக் கேட்கலாம், பின் அவன் பாதுகாப்பாக இருக்குமிடத்திற்கு அவனைக் காத்து, அழைத்துச் செல்லுங்கள்”. (சூரா 9:6)

## பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்

ஹொங்கொங்கில், நான் ஒரு தன்னார்வப் பணியாளராகவும் மற்றும் விசேடமாக அங்கு அடைக்கலம் நாடிய இலங்கையர்கள் மத்தியில் ஒரு சட்ட உதவியாளராகவும் பணியாற்றி வந்தேன். பாக்கிஸ்தானில் எனது விஜயங்களின் போது, மத அடிப்படைவாதத்தின் மனிதப்பண்பற்ற தன்மைகள் பற்றிய ஒரு சுமாரான புரிந்து கொள்ளுதலை நான் பெற்றேன். 2008 இல் நான் இலங்கைக்கு திரும்பியதிலிருந்து, நான், ஆயிரக் கணக்கான பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அடைக்கலம் நாடுவோர்களை சந்தித்திருக்கிறேன். பாக்கிஸ்தானில் அகமதி, கிறிஸ்தவ மற்றும் ˚யா சமூகங்களால் முகங் கொடுக்கப்படும் கொடுமைகளின் தீவிரத்தை அறிந்து, அவர்களது கதைகளை நான் முழுமையாகச் செவிமடுத்து, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய கொழும்பு அலுவலகத்தில் அகதிகள் அந்தஸ்தை தீர்மானிப்பதற்கான விண்ணப்பங்களைத் தயார் செய்வேன்.

அகதிகள் தொடர்பான 1951 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைக்கு தெற்காசிய நாடுகள் எதுவுமே கைச்சாத்திடாத உண்மையினால், இந்தச் சமூகங்கள் பிராந்தியத்தில் வேறெங்காவது அடைக்கலம் நாடுவதற்கு சாத்தியம் இல்லை. இலங்கை மட்டுமே அவர்கள் தப்பிபிழைப்பதற்கான ஒரு நம்பிக்கை. உலகிலேயே மிகப் பெரிய அகதிகள் சமூகத்துக்கு எங்கள் துணைப் பிராந்தியமே தாயகமாக இருந்த போதிலும் கூட, அங்கே தெற்காசிய அகதிகள் சட்டப் பாரம்பரியம் இருக்கவில்லை. 3,000,000ஐ அணுகும் அவர்களது எண்ணிக்கை, பாக்கிஸ்தானில் ஆப்கானிஸ்தான் அகதிகள், இந்தியாவில் சீன அகதிகள், பங்களாதேஷில் ரொகிங்யாஸ், அதே போன்று இந்தியாவில் இலங்கை மற்றும் திபெத்திய அகதிகள் ஆகியோர்களை உள்ளடக்குகிறது.

கடுமையான மத அடிப்படைவாதம் பாக்கிஸ்தானில் பொதுவான நடைமுறையாக உள்ளதுடன் அரசு அல்லாத செயற்பாட்டாளர்களால் சிறுபான்மையினர் அடக்குமுறை அட்டூழியங்களுக்கு உள்ளாவது பாக்கிஸ்தானின் ∴பீனல் கோட் பிரிவு 295 உ இன் கீழான மத நிந்தனைச் சட்டத்தினால் வசதியளிக்கப்படுகிறது. 1970களிலிருந்து பாக்கிஸ்தான் அரசாங்கம் அடக்குமுறைகளை அனுமதித்தே வந்துள்ளதுடன் - 1974 இல் அகமதிகளுக்கு எதிரான கலவரங்களைத் தொடர்ந்து, ஒரு முஸ்லிம் என்பதற்கான வரைவிலக்கணத்திலிருந்து அகமதிக்களை விதிவிலக்கும் வகையில் அரசியலமைப்பை பாக்கிஸ்தானிய நாடாளுமன்றம் திருத்தியது. 1984 இலான ஒரு திருத்தம் அகமதிக்களை அவர்களது நம்பிக்கைகளை வெளிப்படையாகத் தெரிவிப்பதிலிருந்து தடைசெய்தது. இது, அவர்களது பள்ளிவாசல்களைக் கட்டுவது, இருக்கின்ற பள்ளிவாசல்களைத் திருத்துவது, அவர்களது வணக்க ஸ்தலங்களை “பள்ளிவாசல்கள்” எனக் குறிப்பிடுவது என்பவற்றிலிருந்து அகமதிக்களைத் தடைசெய்ததுடன், உலகம் முழுவதிலுமாக முஸ்லிம்களால் சொல்லப்படும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதிலிருந்தும் கூட அவர்களைத் தடை செய்தது.[1] 2010 இல், திட்டமிட்ட துப்பாக்கிய ஏந்திய கும்பல்கள், லாகூரிலுள்ள அகமதிப் பள்ளிவாசல்களுக்குள் நுழைந்து, கூடியிருந்த வழிபடுபவர்களை சுட்டு வீழ்த்துவதற்கு, அவர்கள் மீது கைக்குண்டு வீசுவதற்கு, தற்கொலை அங்கிகளை வெடிக்கச் செய்வதற்குத் தொடங்கி, 95 பேர்களைக் கொன்றனர்.[2] ஒரு மிக அண்மையிலான சம்பவம், இந்த ஜூலையில் நிகழ்ந்தது, அவர்களது சமூகத்திலிருந்தான யாரோ ஒருவர் ஒரு தெய்வ நிந்தனையான படத்தை முகநூலில் பதிவு செய்ததாகக் குற்றஞ்சாட்டிய பின்னர், ஒரு வெறிபிடித்த 1000க் கணக்கான ஒரு கும்பல், ஒரு அகமதிப் பெண் மற்றும் அவரது இரு இளம் பேத்திகளையும் உயிரோடு கொழுத்திக் கொலை செய்தது.[3] இந்த “மத நம்பிக்கை அடிப் படையிலான கொலைகளை” [4]நிறுத்துவதற்கும், அகமதிச் சமூகத்தைப் பாதுகாப்பதற்குமாக பாக்கிஸ்தான் அரசாங் கத்திடம் ஐக்கிய நாடுகள் ஒரு வேண்டுகோளை விடுத்தது, ஆனாலும் அதனால் எதுவும் பயன் இருக்கவில்லை.

நெருக்கடியான நிலைமைகளிலான முகாம்களிலேயே இருந்தனர். அவர்களது அடிப்படைச் சுகாதாரங்கள் கவனிக்கப்படாததினால், சென் மைக்கல்ஸ் தேவாலயம் இந்த அகதிகளுக்காக கழிவறைகளைக் கட்டிக் கொடுத்தது. யு.என்.எச்.சி.ஆர் பாதுகாப்பின் கீழ் இலங்கையில் சுமார் 60 ரோகிங்யாக்கள் இன்னமும் உள்ளனர். எனது விரிவான விபரங்கள் சில வாசகர்களை சலிப்படையச் செய்யலாம், ஆனாலும் இந்த யதார்த்தங்கள் பற்றி அநேகமான இலங்கையர்கள் அறியாது உள்ளனர், என்பதை நான் கண்டறிந்துள்ளேன்.

மீளவொப்படைத்தல், மீள்திரும்புதல் மற்றும் நாடு கடத்தல் தொடர்பான சர்வதேச நியமங்களுடன் ஒத்திசைவாக இருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக “சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கைச் சட்டம் 22ஈ94 மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களை மீள்பரிசீலிப்பதற்கு” சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் குழு (ஊயுவு) 2005 இல் இலங்கைக்கு பரிந்துரைத்தது. இதற்கு, கொடுமைகளுக்கு மீள ஆளாகாதிருப்பதன் மீதான கொள்கைளை நிலை நாட்டுவதாக இலங்கை பதிலளித்தது. இலங்கை மேற்கொண்ட அனைத்துச் சர்வதேச கடப்பாடுகளின் மத்தியிலும், அது அதன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததுடன் சில சர்வதேசச் சட்டங்களுடன் ஒத்திணங்குவதற்கும் மறுத்தது. விசேடமாக, இந்நிலைப்பாடு, கொடுமைகளுக்கு மீள ஆளாக்காதிருப்பதற்கான வழக்காற்று சர்வதேசச் சட்டம் தொடர்பாகவும் அவ்விதமாகவே இருந்தது.

---

1 பன்யன் ஏஷியா, நீ முஸ்லிமா அல்லது இல்லையா என நாங்கள் தீர்மானிப்போம், த எக்னொமிஸ்ட் http://www.economist.com/blogs/banyan/2010/06/state_persecution_and_pakistans_ahmadi_sect

2 ibid.

3 வக்கர் கிலானி, முகநூல் தெய்வநிந்தனை வன்முறையில் 3 கொல்லப்பட்டனர், நியுயோர்க் டைம்ஸ் http://www.nytimes.com/2014/07/29/world/asia/3-pakistanis-die-as-facebook-photo-sets-off-muslim-rampage.html?_r=0

4 “மத நம்பிக்கை அடிப்படையிலான கொலைகளை நிறுத்து” - ஐ.நா மனித உரிமை ஆர்வலர்கள் அகமதியா முஸ்லிம் சிறுபான்மையினரைப் பாதுகாக்க பாக்கிஸ்தானை வலியுறுத்துகிறது. http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID= 14658&# sthash.Mz4HVjOm.dpuf

ஜூன் 2014 இல், அடைக்கலம் நாடுவோர்களை இலங்கை அரசாங்கம் கைது செய்வதற்கு ஆரம்பித்ததுடன் ஆகஸ்டில் அவர்களைப் பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு நாடு கடத்துவதற்கும் தொடங்கியதுடன், அத்தகைய 300 க்கும் மேற்பட்ட ஆட்களை ஏற்கனவே நாடு கடத்தியுமுள்ளது.

ஆப்கானிஸ்த்தானில் கிறிஸ்தவர்கள் எவரும் இல்லை, அல்லது அப்படி இருந்தால் அவர்கள் இன்னமும் பகிரங்கமாக அவ்விதம் அடையாளங் காணப்படுவதற்கு அஞ்சுகிறார்கள், எனக் கூறுகிறார் ஜோன் தத்தாரி. இருந்தும் மிரிஹான முகாமிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு திரும்பவும் நாடு கடத்தப்படுவதை எதிர்நோக்கி தனது மனைவி மற்றும் மகளுடன் காத்திருக்கிறார்.

ஜோன் மற்றும் அவரது குடும்பம் ஆப்கானிஸ்தானில் கொல்லப்படுகிறார்களோ அல்லது இல்லையோ என்பது இலங்கைக்கு ஒரு பொருட்டல்ல, அது அவர்களை நாட்டை விட்டு வெளியே தள்ளிவிடுவதற்கே விரும்புகிறது, அவர்கள் பெரும்பாலும் நிச்சயமான மரணத்திற்கு மீளச் செல்வது, அதற்கு ஒரு விடயமல்ல.

கடந்த 30 ஆண்டுகளின் போது, நாட்டை விட்டுத் தப்பியோடிய எத்தனையோ அரசியல்வாதிகளும் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களும், இலங்கைக்கு மீள்திரும்புவதானால், அவர்களது நிலை தான் என்ன? இலங்கையிலுள்ள அகதிகள் சமூகத்தின் உரிமைகளுக்காக அவர்கள் எவருமே பேசுவதை நான் ஒரு போதும் கண்டதில்லை. அன்றேல், இலங்கையில் புகலிடம் தேடுவோர்கள் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணைகள் அல்லது வாய் மூலமான கேள்விகள் பாராளுமன்றத்தில் எழுப்பப்படுவதையும் கூட நான் கேட்டதில்லை.

இது பல்வேறு முரண்நிலைகளுக்கு எதிரானது என நான் அடிக்கடி உணர்ந்த போதிலும், மதமோ அல்லது அவர்களின் சொந்த இடமோ என்பதைக் கவனத்தில் கொள்ளாது, இந்த இடரேதுநிலையிலுள்ள சமூகங்களுக்கு ஆதரவையும் மற்றும் சேவைகளையும் வழங்கிய சில தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

புராதன மனித நாகரீகத்தில், ஏரோது மன்னனின் கட்டளைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட படுகொலையிலிருந்து தப்பிய ஒரு அகதிச் சிறுவனே ஏசு. இந்த நவீன காலத்தில், பல்வேறுபட்ட சர்வதேச உடன்படிக்கைகளால் பொதுவான மனிதநேயம் வலுப்பட்டுள்ளதாக நாம் பெருமை கொள்கிறோம். எவ்வாறாயினும், கசப்பான உண்மை என்னவெனில், ஏசு இலங்கையில் இன்று அடைக்கலம் நாடுபவராக இருந்திருந்தால், அவர் இஸ்ரேலுக்கு மீளவும் நாடு கடத்தப்பட்டிருப்பார் என்பதுடன் அவர் ஏரோது மன்னின் படைவீரர்களின் கைகளில் கொல்லப்பட்டுமிருப்பார்.

லக்ஷான் டயஸ்[5]

**ஓர் அடைக்கலம் நாடுவோர்** என்பவர் தான் ஒரு அகதி எனக் கோரிக்கையை விடுக்கும் ஒரு நபராவர். அத்தகைய நபர், அடைக்கலம் நாடும் செயன்முறையில் இன்னமும் உள்ள ஒரு நபராவர்.

**கொடுமைகளுக்கு மீள ஆளாக்காமை மீதான கொள்கை** – மக்கள் அபாயங்களை எதிர்நோக்கும் ஆட்புல எல்லைகளுக்குள் அவர்களைப் பலவந்தமாக மீள்திருப்புவதிலிருந்து நாடுகளைத் தடைசெய்யும் வழக்காற்று சர்வதேசச் சட்டத்தின் ஒரு கொள்கை நிலை.

**அரசாங்கத்தின் நிலைப்பாடு:**

வெளிவிவகார அமைச்சிலிருந்து ஏ.எம். ஜே. சித்தீக், “கொடுமைகளுக்கு மீள ஆளாக்காமைக் கொள்கை 1951 ஆம் ஆண்டின் அகதிகள் உடன்படிக்கையின் ஒரு பகுதி, அவ்வுடன்படிக்கைக்கு நாம் ஒரு தரப்பல்லாததால், அக்கொள்கையால் நாம் பிணிக்கப்படவில்லை”, எனக் கூறினார்.

**எண்ணிக்கைகள்**

இலங்கையை விட்டுத் தப்பயோடி வேறெங்காவது அடைக்கலம் நாடியுள்ள ஆட்களின் கணிப்பிடப்பட்ட எண்ணிக்கை: 146,000

செப்டெம்பர் 2014 வரை இலங்கையில் அடைக்கலம் நாடிய மற்றும் அகதிகளின் கணிப்பிடப்பட்ட எண்ணிக்கை: 1800

பாக்கிஸ்தானிலிருந்து அடைக்கலம் நாடியவர்களின் கணிப்பிடப்பட்ட எண்ணிக்கை:1500

ஆகஸ்ட், 2014 இலிருந்து நாடுகடத்தப்பட்ட அடைக்கலம் நாடியவர்களின் எண்ணிக்கை: 331

5 சட்டத்தரணி, தலைவர் ளுயுசேஜஆஇ கொழும்பு நகர சட்டத்தரணிகள் மற்றும் லக்ஷான் டயஸ் அசோயேட்ஸ் - அகதிகள்,மனித உரிமைகள், மத உரிமைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் மீதான சட்ட ஆலோசகர்கள்.

## இலங்கையில் தற்கொலை நோய் தொடர்பாக வைத்தியர் டொம் விட்ஜர் அவர்களுடனான நேர்காணல்



Dr. Tom Widger

“தற்கொலையைத் தடுத்தல்: ஓர் உலகளவில் கட்டாயமானது” எனும் தலைப்பில், உலக சுகாதார ஸ்தாபனத்திலான 2014 அறிக்கை, உலகில் அதிவுயர்ந்த தற்கொலை வீதம் கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கையை, நான்காவது இடத்தைக் கொண்டதாக ஸ்தானப்படுத்தியுள்ளது. 1980களின் நடுப்பகுதிகளிலிருந்து உலக சராசரிக்கு, மேலான ஒரு தற்கொலை வீதத்தை இலங்கை தொடர்ச்சியாகக் கொண்டிருந்ததினால், இது ஆச்சரியப்படுத்துகின்ற ஒரு விடயமாக இருக்கவில்லை. இத்தனை வருடங்களாக இந்த ஒரு அதிகரித்த தற்கொலை வீதம் ஏன் நிலைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் முகமாக, நாங்கள், “இலங்கையில் தற்கொலை: ஒரு நோயின் மானுடவியல் ஆய்வு”, எனும் நூலை எழுதியவர், மற்றும் இந்த நிகழ்வை கடந்த 14 வருடங்களாக ஆராயந்தவருமாகிய வைத்தியர். டொம் விட்ஜர் (இணை ஆராய்ச்சியாளர், சசெக்ஸ் பல்கலைக் கழகம்) அவர்களிடம் நாங்கள் பேசினோம்.

சட்டம் மற்றும் சமுதாயத்திற்கான அற நிலையத்தின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான (ESCR) அணியினர், இந்த விடயம் தொடர்பாக ஒரு நேர்காணலைத் தந்தமைக்காக வைத்தியர். விட்ஜர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு விரும்புகிறது.

**கே: வலிமையான தேசிய தற்கொலைத் தடுத்தல் மூலோபாயமொன்றின் அம்சங்கள் என்ன? இலங்கையின் மூலோபாயம் எந்தளவிற்கு உள்ளது?**

**ப:** உண்மையில், ஒரு தேசிய தடுத்தல் மூலோபாயமொன்றை இலங்கை கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி மூலோபாயமொன்று 1996 இல் வெளியடப்பட்டது, அது பீடைநாசினிக் கட்டுப்பாடுகளின் பின்னால் அதிக அழுத்தங்களை இட்டது, ஆனால் சமூக இடையீட்டைப் பொறுத்த வரை மிகக் குறைவானவையே நடைபெற்றுள்ளன. தற்கொலை எண்ணங்கள் மனதில் எழுவதைத் தடுப்பதற்கு, இலங்கை முழுவதுமான உளவளவியல் சேவைகளை விருத்தி செய்வதற்கான மேலும் உந்துதலை சுனாமியின் தாக்கங்கள் வழங்கின, ஆனால் அவை எந்தளவிற்கு பயனுறுதியானவை அல்லது பயனுறுதியாக இருக்க முடிந்தது என்பது பற்றித் தெரியாது.

> இலங்கையில் சுய-தீங்கிழைத்தல் மற்றும் தற்கொலைகள் என்பன மனச்சோர்வுகளால் காரணப்படுத்தப்படுபவை அல்ல, ஆனால் உறவுமுறை வன்முறைகளாலானவை என்பதை சான்றுகள் மிகவும் தெளிவாகக் காண்பிக்கின்றன. இந்தப் பணி முக்கியமாக மனநல வைத்தியர்களுக்கானதா அல்லது சமூக சேவைகளுக்கானதா? இது விசேட மன நல இடையீடுகள் மூலமாக அல்லது மிகவும் பரந்த, பால்நிலை சமத்துவம் மற்றும் வீட்டு வன்முறைகளைக் குறைத்தல் என்பவற்றைச் சார்ந்த பரந்த சமூக அடிப்படை மூலோபாயங்கள் மூலமாக கையாளப்படுதல் வேண்டுமா? இந்தக் கேள்விகளுக்கு இலங்கை பதிலளித்தல் வேண்டும்.

ஒரு மானுடவியலாளராக, எந்தவொரு தேசிய தடுத்தல் மூலோபாயத்திலும் சமூககலாச்சார விடயங்கள் மீது அதிகம் கூடுதலான கவனத்தையே காண்பதற்கு, நான் விரும்புகிறேன். உண்மையில், கலாச்சார, சமூக மற்றும் மருத்துவ ஒப்புரவை நாம் அடைதல் வேண்டுமென்று நான் வாதிடுகிறேன். முதலில், மனதில் தற்கொலை பற்றிய உள்ளுர் ஒரு மானுடவியலாளராக, எந்தவொரு தேசிய தடுத்தல் மூலோபாயத்திலும் சமூககலாச்சார விடயங்கள் மீது அதிகம் கூடுதலான கவனத்தையே காண்பதற்கு, நான் விரும்புகிறேன். உண்மையில், கலாச்சார, சமூக மற்றும் மருத்துவ ஒப்புரவை நாம் அடைதல் வேண்டுமென்று நான் வாதிடுகிறேன். முதலில், மனதில் தற்கொலை பற்றிய உள்;ர் அர்த்தங்களுடன் தடுத்தல் திட்டங்கள் வடிவமைக்கப்படுதல் வேண்டும் - அவை கலாச்சார ரீதியாக ஒப்புரவானவைாக இருத்தல் வேண்டும். ஒரு உள்ளூர்ப் பிரச்சினைக்கு உலகத் தீர்வுகளை வெறுமனே பிரயோகிப்பது என்பது வினைத்திறனற்றது. தங்களது நடத்தைக்கான காரணங்களை தற்கொலை எண்ணங் கொண்ட ஆட்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள் என்பதற்கும் மற்றும் அந்தப் புரிந்துகொள்தல்களுக்கு தொழில்சார் தகைமையாளர்கள் எவ்வாறு பதிலிறுக்கிறார்கள் என்பதற்கும் இடையிலான கூடுதல் பொருத்தம் வளங்கள் வீணடிக்கப்படும் ஆபத்தைக் குறைப்பதோடு நோயாளிகளின் சிறந்த பலன்களுக்கும் இட்டுச் செல்ல முடியும். ஒரு மனநலப் பிரச்சினையாக அதனைக் கருதும் தற்போதைய வரைவிலக்கணப்படுத்தலில் இருந்து அதன் கலாச்சார மூல காரணங்களை கருத்தில் கொள்வதற்கு செய்யும் வரை, இலங்கையில் சுய-தீங்கிழைத்தல் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப் படுகிறது என்பதை மீளச் சிந்திப்பதற்கு இது தேவைப்படுத்தும். இத்தகையதொரு மீள்சிந்தனை இலகுவானதன்று, அநேக வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. அது சுகாதார மற்றும் சமூக ஆராய்ச்சியாளர்களிடையே உள் ஒழுக்காற்று ஒத்துழைப்பு மற்றும் ஒரு காலத்திற்கு கலந்துரையாடல்களைப் பேணுதல் என்பவற்றைக் கோருகிறது.

இரண்டாவது, தடுத்தல் திட்டங்கள் முதலில் தற்கொலைக்கு இட்டுச்செல்லும் சமத்துவமின்மைகளை மீள உருவாக்கு வதைத் தவிர்த்தல் வேண்டும் - அவை, சமூக ரீதியில் ஒப்புரவானதாக இருத்தல் வேண்டும். இலங்கையில், தற்கொலை நடத்தைகள் உறவுமுறை முரண்பாடுகளுக்கு, அநேகம் சில வகையான தவறான கையாளுதல் அல்லது துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு கவனத்தை ஈர்ப்பதற்காக பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான சரியான உதாரணங்கள், சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் ரீதியாகவோ அல்லது பெண்களின் வெளிநாடு செல்லுதலுக்காக பெண்களின் உடம்புகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அதிகளவு எண்ணிக்கையான ஆண்களின் தற்கொலைகள், சவாலுக்குட்படுத்தப்பட்ட அவர்களது ஆண்தன்மைகளுக்கான பதில் நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் சுய-தீங்கிழைத்தல் ஏனைய தொடர்பாடல் முறைகள் இல்லாதவிடத்து- ஒரு முக்கியமான – ஆபத்தானதாயின் - தொடர்பாடுவதற்கான வாய்ப்பை அது அளிக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தை மட்டுப்படுத்தலானது அவர்களது வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு நபரின் ஆற்றலை – ஒரு நெறிமுறையான வாதிடும் கருத்தை மட்டுப்படுத்துவதாக அர்த்தப்பட முடியும். சுகாதாரப் பணியாளர்கள் உயிர்களைக் காப்பதற்கான அவர்களது வாக்குறுதிகளை மதித்தல் வேண்டுவது மட்டுமன்றி ‘தீங்கு ஏற்படுத்தாதும் இருத்தல் வேண்டும். இப்போதுள்ள போக்கைப் பொறுத்தவரையில், உளவியல் வளத்துணை நோயாளிகளை துஷ்பிரயோகிக்கின்ற ஒரு சூழலுக்கு திரும்ப அனுப்புவதில் முடிதல் கூடாது. உதாரணத்துக்கு, மன நலம் ஆராக்கியம் மற்றும் சமூக சேவைகள் என, சம்பந்தப்படும் முகவரமைப்புகளிடையே கூடுதலான ஒத்துழைப்பை இது தேவைப்படுத்தும், இதன் மூலம் வைத்தியசாலை மற்றும் சமூகத்திற்கும் இடையிலான கவனிப்பு சீரடையும்.

மூன்றாவது, கூடுதலான கலாச்சார மற்றும் சமூக ஒப்புரவு, மேம்படுத்தப்பட்ட மருத்துவ ஒப்புரவுக்கு இட்டுச் செல்ல முடியும். தற்கொலை நடத்தைகள், மனச்சோர்வின் பாடப் புத்தக வரைவிலக்கணத்தோடு பொருந்தாத நிலையில், பல முன்னணி மருத்துவ ஊழியர்கள் எதிர்கால எத்தனிப்புகளை தாமதிக்க முயற்சிப்பதன் மூலம் முதலுதவிச் சிகிச்சைகளை தேவையற்ற வகையில் வலி கொண்டதாக்குகின்றனர். இந்த நடைமுறை இலங்கைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல, ஆனால் பாரதூரமற்ற சுய தீங்கிழைத்தல் ‘கவனத்தை நாடுவோர்களினால் ‘உதவிகளுக்கான வெறும் கோரிக்கைகள்’ எனப் பொதுவான ஒரு தப்பபிப்பிராயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆனால், அவர்கள் என்னவாக உள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக – ஒருவர் மற்றும் ஏனையவர்களுக்கிடையே சமூக தொடர்புகளை மாற்றுவதில் கலாச்சாரரீதியாக அர்த்தமுள்ள நடைமுறைகளாக – சுகாதார மற்றும் சமூக சேவைத் தொழில்சார் தகைமையாளர்கள் பச்சாதாபத்தோடு பதில் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு அவர்களைச் சிறந்த முறையில் இடுமென்பதோடு அத்தகைய தீவிரமான நடைமுறைகளை எடுக்கப்பட வேண்டியதில்லையென்ற நிலைக்கு தற்கொலைக்கு முனைபவர்களை இடுவதற்கும் இறுதியில் உதவும்.

**கே: ரிப்பப்பிளிக் ஸ்குயர் (Republic Square) என்பதற்காக எழுதும் டேவ் ர்‘, மிகவும் தென்படும் வகையிலானதும் மற்றும் வெற்றிகரமானதுமான தேசிய டெங்கு ஒழிப்பு பிரச்சாரம் (அது, கடந்த வருடம் இலங்கையில் 225 பேர்களைக் கொன்றது) மற்றும் தற்கொலை தொடர்பான விழிப்புணர்வின்மை (இது, கடந்த வருடம் 3500 எனும் ஒரு அதிகரித்த எண்ணிக்கையிலான உயிர்களைக் காவு கொண்டது) என்பவற்றுக்கிடையிலான ஒரு முரண்பாட்டை எடுத்துக் காட்டினார். தற்கொலையை விவாதிப்பது ஒரு கலாச்சார ரீதியில் சமூகத் தடைக்குரியதா? அல்லது அதனைத் தடுப்பதற்கு அரசு பற்றுறுதி கொள்ள வில்லையா?**

**ப:** தற்கொலை பற்றி கதைப்பது ஒரு சமூகத் தடை என்பது பற்றி எனக்கு நிச்சயமில்லை, தற்கொலை என்பது குணமாக்கக்கூடிய ஒரு நோய் அல்லது கலாச்சார வாழ்க்கையின் பகுதியாக காணப்படுகின்ற ஒரு சமூக நடைமுறை என மக்கள் நிச்சயமில்லாமல் இருப்பதன் காரணமாக அநேகம் அப்படி இருக்கலாம். டெங்குவுடன் ஒப்பிடுகையில், அதில் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் தெளிவாகத் தெரிகின்ற வகையிலான பாதிக்கப்பட்டவர்களாவர். தற்கொலையுடன், எப்பொழுதுமே ஒரு ‘தெரிவுக்கான’ ஒரு அளவு இருக்கின்றது. 1990களில் தற்கொலைத் தடுத்தல், இன்று நோய்க் காரணம் தெரியாதுˆநிச்சயமில்லாத கடுமையான சிறுநீரக நோய் தடுத்தல், பீடைநாசினிகளின் கட்டுப்படுத்தல் தொடர்பாக சில தைரியமான நகர்வுகள் வழிநடத்தியதைப் போன்ற நிலையில் இருந்தது. உண்மையில், தற்கொலைத் தடுத்தலின் ஒரு வடிவமாக பீடைநாசினிகளின் மட்டுப்படுத்தல் என வரும்போது, ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலேயே இலங்கை ஒரு முன்னுதாரணமான நாடாக உள்ளது.

ஆனால் சுய-தீங்கிழைத்தல் பக்கம் திரும்பவும் பார்த்தால், ஆம், அங்கு மிகக் குறைவான நடவடிக்கைகளே காணப்படுகின்றன. இங்கே, பால்நிலை சமத்துவம் மற்றும் வீட்டு வன்முறை போன்ற பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் எவ்வாறு செயற்படுகின்றது எனக் கேட்க முடியும். இந்தப் பிரச்சினைகள் பற்றியும், மற்றும் பொதுவாக மனித உரிமைகள் பற்றியும் பேசும் போது. சிவில் சமூகம் மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் என்பன நிச்சயமாக சமூகத் தடை பற்றிய விடயத்தில் முன்னின்று வழிகாட்டலாம்.

**கே: மேற்கு நாடுகளில் தற்கொலைக்கான காரணங்களுக்கும் மற்றும் இலங்கையில் அவற்றுக்கான காரணங்களுக்கும் இடையில் ஒரு கணிசமான வேறுபாடு உள்ளதாக நீங்கள் எழுதியுள்ளீர்கள். இலங்கையில் தற்கொலைக்குப் பங்களிக்கும் கலாச்சாரக் காரணிகள் என்ன?**

**ப:** இது ஒரு கடினமான கேள்வி, அங்கு வேறுபாடுகள் இருக்கின்றதென நான் எண்ணும் அதே வேளை, அவற்றை மிகைப்படுத்திக் கூறாதிருப்பது அல்லது அதற்கு ஒரு பொருள் கொடுக்காதிருப்பதும் முக்கியமென நான் நினைக்கிறேன். நான் சொல்வது என்னவென்றால், தற்கொலை என்பது பிரசித்தமான வகையிலும் மற்றும் மருத்துவ ரீதியான கண்ணோட்டத்தில் எவ்வாறு கருதப்படுகிறது என்பதைப் பற்றியதாகும். உண்மையான நடைமுறையில், அநேகம் சொல்லப்படாமலும் மற்றும் அநேகம் கவனிக்கப்படாத வகையிலும் அங்கு அதிளவிலான மேற்கவிதல் (overlap) உள்ளது, என நான் நினைக்கிறேன்.

எனவே, ஐரோப்பிய- அமெரிக்க பின்னணிச் சூழலில், மனச்சோர்வு போன்ற ஆழமாகப் பொதிந்துள்ள உளவியல் ரீதியான நோயின் விளைவாகவே தற்கொலை ஏற்படுகிறதென, அநேகம் 90% கணிப்புகளின்படி பலரும் கருதுகின்றனர். ஆட்கள் தற்கொலைக்கு உணர்கையில் அல்லது தற்கொலை எண்ணம் கொண்டவராக சந்தேகிக்கப்படுகையில், அவர்கள் மன நல நிபுணர்களிடம் காட்டப்படுகின்றனர். அவர்களை ஒரு சிகிச்சைத் திட்டத்தை மற்றும், அல்லது ஒரு மருந்துச் சிகிச்சை முறையைப் பின்பற்றுவதற்கு வைத்தியர்கள் ஊக்குவிக்கின்றனர். தற்கொலை எண்ணங்கள் மற்றும் திட்டங்கள் சில நாட்கள், வாரங்கள், அல்லது மாதங்கள் வரையிலான காலப்பகுதிக்குள்ளே உருவாகும் என்பது, அபாயச் சமிக்கைகளை குடும்பத்தினரோ அல்லது நண்பர்களோ கண்டறிந்து இடையீடு செய்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதைக் கருதுகிறது. தற்கொலை பற்றி சிந்திக்கும் ஆட்கள் யாரும் அறியாத வகையில் மருந்துகளைச் சேர்த்து வைப்பதற்கு ஆரம்பிக்கலாம் அல்லது அவர்கள் இவ்வுலகை விட்டுப் போன பின், வாழ்க்கையைப் பற்றிப் பேசலாம்' அவர்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சிக்குண்டு இருப்பதாகவும் தப்புவதற்கு வழி தெரியாது இருப்பது பற்றியும் பேசலாம். இப்படியான எண்ணங்கள் தற்கொலை நோக்கம் கொண்ட ஆட்களை ஒரு தொழில்சார் உதவியை நாடுவதற்கு ஊக்கப்படுத்துவதற்கோ அல்லது அவ்வாறு செய்வதற்கு மற்றவர்களை ஊக்கப்படுத்துவதற்கோ போதுமானது. ஆனால் இலங்கையில், தற்கொலை நடத்தைகள் குறைந்த அல்லது எந்த எச்சரிக்கையுமில்லாது 'உணர்ச்சி வேகத்தில்' தோன்றுபவை என மக்கள் கருதுகின்றனர். மனநல வைத்தியர்கள், உளநலவியலாளர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் மானுடவியலாளர்கள் உட்பட, நாட்டில் தற்கொலை தொடர்பாக பணியாற்றும் ஆராய்ச்சியாளர்கள் தற்கொலைச் சம்பவங்களில் 10% மற்றும் 40% இடைப்பட்ட ஒரு சிறிய தொகையே மனச் சோர்வுடன் சம்பந்தப் பட்டவை என்பதில் இணங்குவார்கள் (மேற்கத்தைய நோய் கண்டறியும் வகையின் பிரயோகத்தைப் பலருமே முற்றிலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்). பதிலுக்கு, ஒரு பொதுவான அறிக்கை போல, ஒரு குடும்பப் பிணக்கு அல்லது சடுதியான ஏமாற்றம் என்பன மிதமிஞ்சிய துக்கம், ஏமாற்றம், மற்றும் கோபம் ஆகிய உணர்வுகளை ஏற்படுத்தி, நஞ்சை அருந்துவதற்கு இட்டுச் சென்றது என்பர். தற்கொலை எண்ணங்கள் மற்றும் திட்டங்கள் என்பன ஒரு சில மணித்தியாலங்கள் அல்லது நிமிடங்களில் ஏற்படலாமென்பது – குடும்பத்தவர்களோ அல்லது நண்பர்களோ அபாய சமிக்கைகளைக் கண்டு இடையீடு செய்வதற்கு மிகச் சிறிய கால அவகாசத்தையே விட்டு வைக்கிறது. தற்கொலைக்கான எண்ணம் மிகச் சடுதியாகத் தோன்றுவதினால், தங்களது எண்ணங்கள் தொடர்பாக பிரதிபலிப்பதற்கும் மற்றும் சுய தீங்கை புரிவதற்கு முன்னர் யாருடனாவது பேச முயற்சிப்பதற்கும் அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை.

**கே: உங்களது வைத்தியக் கல்வித்துறை முழுவதிலுமாக, சுமார் 14 வருடங்கள் இந்தப் பிரச்சினையை விரிவாக நீங்கள் ஆராய்ச்சி செய்துள்ளீர்கள். உங்களது அனுபவத்தில், இலங்கைத் தற்கொலைகளில் நீங்கள் காண்கின்ற மாதிரிகள் என்ன?**

**ப:** தற்கொலை செய்து கொள்ளும் மாதிரிகள் நாடு, பிராந்தியம், இனம் மற்றும் பால்நிலை என்பவற்றின் அடிப்படையில் வேறுபடுகிறது. தற்கொலை வீதங்கள் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களிடையே மிக அதிகமாகவும், முஸ்லிம் சமூகங்களிடையே மிகவும் குறைவாகவும் இருக்கக் காணப்படுகிறது. அத்தோடு தற்கொலை பௌத்த மற்றும் இந்து சமூகங்களில் மிக அதிகமாக இருக்கையில், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ சமூகங்களில் மிகவும் குறைவாக இருக்க காணப்படுகிறது. இறுதியாக, பரசிற்றமோலினால் சுய தீங்கிழைத்தலிலான அண்மைய அதிகரிப்பு தற்கொலையின் நகர்மயப்படுத்ததலைக் குறிப்பிட்டாலும் கூட, தற்கொலைகள் கிராமப்புறத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

இலங்கையின் தற்கொலை மற்றும் சுய தீங்கிழைத்தல் நோய்களுக்கான சாத்தியமான காரணங்கள் தொடர்பாக ஒரு பொதுவான உடன்பாடின்மை உள்ளது. ஒரு புறத்தே மருத்துவ தொழில்சார் தகைமையாளர்கள், அவர்களில் சிலர் தற்கொலை மனச்சோர்வினால் முக்கியமாக ஏற்படுகிறது என விவாதிக்கையில் மற்றொரு குழுவினர் மனச்சோர்வு ஒரு சிறிய எண்ணிக்கையான சம்பவங்களுக்கு மட்டுமே காரணமாகின்றது என வாதிடுகின்றனர். மறுபுறத்தில் சமூக விஞ்ஞானிகள், அவர்களில் சிலர், தற்கொலை பேரினப் பொருளாதார மட்டம், சமூக மற்றும் அரசியல் குழப்பநிலை என்பவற்றால் ஏற்படுத்தப்படுகிறது என வாதிட்ட வேளையில், அவர்களில் வேறு சிலர் ஆளிடை முரண்பாடுகளுக்கு கலாச்சார ரீதியாக உட்பொதிந்துள்ள பதிலிறுத்தலாக தற்கொலையை வாதிடுகின்றனர்.

ஒரு இறுதி விளக்கத்தை மெய்ப்பிப்பதில் இன்னமும் நீண்ட தூரம் செல்வதற்கு காணப்படுவதால், 'அண்மித்த' காரணங்கள் தொடர்பாக கூடுதலான உடன்பாடுகள் உள்ளன. இது, குடும்ப மற்றும் ஆளிடை முரண்பாடுகளின் ஒரு பல வகைகளையும் உள்ளடக்குகிறது, உதாரணம் வாழ்க்கைத்துணைகள், பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் மற்றும் நெருங்கியவர்களுக்கிடையிலான வாக்குவாதங்கள். காதல் விவகாரங்களிலான தோல்விகள், திருமண வாழ்க்கைக்குப் புறம்பான உறவுகள், பரீட்சைத் தோல்விகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் என்பனவும் கூட அடிக்கடி காரணங்களாகச் சுட்டிக் காட்டப்பட்டன. பல சம்பவங்களில், அவமானம் என்பது தற்கொலைக்கு இட்டுச் செல்லும் ஒரு முக்கிய காரணமாக அங்கீகரிக்கப்பட்டது' சுய-தீங்கிழைத்தல் அல்லது தற்கொலை அவமானத்திலிருந்து தப்புவதற்காக இல்லாது மற்றொரு நபருக்கு அவமானத்தினை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டவையாக இருக்கலாம். பல சம்பவங்களில், சுய-தீங்கிழைத்தல் அல்லது தற்கொலை என்பது ஒரு பொருத்தமான பதிலை வழங்குவதற்கு அவர்கள் உணர்ந்த காரணத்தினால் ஏற்படுகின்றன: சிறுவர்கள் மற்றும் இளம் பெண்களில், உதாரணத்துக்கு, சுய தீங்கிழைத்தல் என்பது பகிரங்கமாக கோபத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு மாற்றீடாக உள்ளது. சுய-தீங்கிழைத்தல், தற்கொலை, மற்றும் பால்நிலை மற்றும் ஏனைய வடிவிலான உறவுச் சமத்துவமின்மை என்பவற்றுக்கிடையில் ஒரு முக்கியமான உறவு உள்ளதாகக் காணப்படுகிறது. இறுதியாக, சுய-தீங்கிழைத்தலின் பல செயற்பாடுகள் கூட, குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு ஒரு சடுதியான மற்றும் திட்டமிடாத பதிலாக, 'உணர்ச்சி வேகத்தில்' தோன்றுவதாகச் சொல்லப்படுகிறது. ஒரு நீடித்த காலச் சிந்தித்தலின் பின்னரே மிகச் சில சம்பவங்களே ஏற்படுகின்றன என்பது, ஐரோப்பிய- அமெரிக்க பின்னணிச் சூழலுக்கு வடிவமைக்கப்பட்ட உளச் சமூகவியல் தடுத்தல்களின் வினைத்திறனை, இங்கு பொருத்தமற்றதாக ஆக்குகின்றது.




Dr. Tom Widger's book, 'Suicide in Sri Lanka: the Anthropology of an Epidemic'

# இலங்கை பொருளாதாரக் கொள்கை: தவறிப்போன முன்னுரிமைகள்

வீணாரவாரம் மிக்க பொதுப்பணிகள் செய்திகளின் தலையங்கங்களை ஆக்கிரமிப்பதைக் காண்பது இலங்கையர்களுக்கு மிகவும் பழகிப் போயுள்ள வேளையில் அரசியல்வாதிகள் அவ்விதமான செய்திகளை விரும்புகிறார்கள். அது ஒரு நெடுஞ்சாலை நாட்டுப்புறங்க;டாக ஊடறுத்துச் செல்வதாகட்டும் அல்லது ஒரு சந்தேகத்திற்கிடமான விமான நிலையமாகட்டும், அவை அனைத்தும்' அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தின் அற்புதமான அடையாளச் சின்னங்கள் என ஒரே விதமான பிரதிபலிப்பையே கொண்டிருக்கும். இருந்தபோதிலும், தொழில்நுட்பமும் புத்தாக்கமும் அபிவிருத்தியடைந்ததிலிருந்து அபிவிருத்தியடைவதை வேறாக்கும் ஒரு உலகில், உட்கட்டுமானங்களுக்கு அப்பால், ஓர் அறிவுப் பொருளாதாரத்தில் முதலீடு செய்வது முக்கியமானதாகும். அத்தகைய பொருளாதாரம்' தொழில்நுட்பம், தொழில்முனைவோராண்மை மற்றும் புத்தாக்கம் என்பன வளமுற முடியுமான ஒரு சுற்றாடலை உருவாக்குவதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்ட ஒன்றாகும். புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் இன்மை காரணமாக உயர் வருமானம் கொண்ட நாடுகளுடன் போட்டியிடுவதற்கு இயலாத நாடுகளிடையே, இலங்கை போன்ற ஒரு குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாட்டுக்கு, "நடுத்தர வருமானம்" எனப்படும் பொறியிலிருந்து தப்புவதற்கான சிறந்த வழி, இதுவாகும். ஒரு அறிவுப் பொருளாதாரத்துக்கு நிலைமாற்றம் பெறுவது இயற்கை வளங்களின்மை அல்லது குறைவான புவியியல் சாதகங்கள் போன்ற ஏனைய தடைகளை சரியீடு செய்வதற்கு முடியுமென்பது, முக்கியமானதாகும். அத்தகையதொரு பொருளாதாரத்தின் நன்மைகளைப் பற்றிக் கொள்வதற்கு, மனித மூலதனத்திற்கு ஒரு பெரும் அளவிலான முதலீடு இலங்கைக்குத் தேவை. இது சுகாதாரம், கல்வி மற்றும் சமூக நலன்புரிகள் போன்ற ஒப்பீட்டளவில் மக்கள் பொதுநலன் சார்ந்த விடயங்கள் மீது பெரும் அளவிலான செலவினத்துடன் சம்பந்தப்படுகிறது. இருந்தபோதிலும், ஒரு ஜுலை ஊடக வெளியீட்டில் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியவாறு, அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் ஒரு அறிவுப் பொருளாதாரத்தின் அபிவிருத்தி நோக்கியும் மற்றும் பிரஜைகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளின் நீடித்தலிற்கும் பாதகமாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் சுட்டிக்காட்டியவாறு, உயர் வருமானம் ஈட்டும் பொருளாதாரங்கள் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான ஒரு பலமான நிறுவனக் கட்டமைப்பு என்பவற்றுக்கிடையில் ஒரு பலமான உறவு காணப்படுகின்றமை, சுவாரசியமானதாகும். அத்தகைய உரிமைகள் சம்பந்தப்படுகின்ற போதிலும் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாத்தல்கள், ஒரு போதுமான வாழ்க்கைத் தரம், சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றுக்கான உரிமைகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. தொழில் முகவாராண்மை, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றை வலியுறுத்துவதற்கு விரும்பும் ஒரு பொருளாதாரம் அதன் பிரஜைகள் அவர்களது அதியுயர்ந்த ஆற்றல்திறனை அடைவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான முதலீடுகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளைத் தேவைப்படுத்துகிறது. அவர்களது உரிமைகள் பயனுறும் ஒரு சுற்றாடலில் மட்டுமே, குறைந்த செலவுக் கிரயங்களைத் தேவைப்படுத்தும் பாதுகாப்பான அல்லது இலகுவான ஆனால் குறைந்த பலன்களையும் கொண்டு வரும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக உயர் இடரேதுநிலை ஆனால் உயர் பலாபலன்களைக் கொண்டு வரும் நடவடிக்கைகள் நோக்கி தங்களது சக்தியை அவர்களால் நெறிப்படுத்த முடியும். இவ்விதமாக, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை ஆராய்வதற்கு பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பிரிவு (ESCR) ஒரு பொருத்தமான உருப்பெருக்கியாக இருக்க முடியும்.

> சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் புதைந்துள்ள ஏனையவை, மோசமான பொது (அரச) வருமானம், போதியதல்லாத முதலீட்டு வீதங்கள், மற்றும் உயர் மட்டங்களிலான பொதுக் கடன்கள் என்பவற்றுக்கு எதிரான கடுமையான எச்சரிக்கைகளாகும். அவை அனைத்தும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை எதிர்மறையான வகையில் பாதிப்பதுடன் ஒரு உயர் வருமானம் உருவாக்கும் அறிவுப் பொருளாதாரத்திற்கு மாற்றம் பெறுவதற்கான இலங்கைப் பொருளாதாரத்தின் ஆற்றலை ஊறுபடுத்துகிறது.

2013 அளவிலான அரசாங்க அல்லது பொதுக் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 78% ஆகும், இலங்கையின் தரங்களிற்கு இது "மிகவும் அதிகமானது" என, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி, கோஷி மாத்தாய், தெரிவிக்கிறார்.[3] மேலும், கடனின் கட்டமைப்பும் கூட மாறுகின்றது. இலங்கை தற்போது அதிகரித்த வட்டி வீதங்களில் கூடுதலாக குறுகிய காலக் கடன்களை உபயோகிக்கிறது. பொது முதலீடு 2011 இன் 6.3% இலிருந்து 2.13 இல் 2.13% இற்கு வீழ்ச்சியடைந்த நிலையில், பொருளாதாரத்திற்கு இது ஏற்கனவே பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.[5] [குறிப்பு: அரசாங்க முதலீடு 6.9% ஆகக் குறிப்பிடும் இலங்கை மத்திய வங்கியின் தரவுகளுக்கும் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகளுக்கும் இடையில் வேறுபாடு உள்ளதுஸஜ6ஸ. ஒரு கூடுதல் சேதத்தை ஏற்படுத்தும் குறிக்காட்டி, வரி வருமானங்களுடன் ஒப்பிட்ட அரசாங்கக் கடன்களாகும், அது தற்போது சுமார் 600% இல் நிற்கின்றது.[4] மேலும், இலங்கையில் வரி வருமானங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 11.5% ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது, இது அனைத்து ஆசியாக்களிலுமே மிகக் குறைந்த தொகைகளில் ஒன்றாகும். இந்த அனைத்து எண்களும் ஒப்பீட்டளவிலும் (இலங்கையின் பிராந்திய சக நாடுகள் மற்றும் ஒரே வருமானம் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில்) மற்றும் தனியாகவுமென இரு விதத்திலுமே ஒரு பலவீனமான நிலைப்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றன. இருந்தபோதிலும், இந்த பெருங்கேடான இறைப் பலவீனம் பொதுமக்களிடம் சென்று பதிவதில்லை, ஏனெனில் அத்தகைய மோசமான கொள்கைகள் உண்மையாக பயன்களைத் தருவதற்கு தசாப்தங்களை எடுக்குமென்பதோடு, அவ்விதம் அவை பயன்களைத் தந்தாலும், செலவுக் கிரயம் வேறுபட்ட வருமானக் குழுக்கள் மீதாக பகிரப்படும் (வறியவர்களும் நடுத்தர வகுப்பினருமே அதன் பெரும்பாலான பாதிப்பை எதிர்கொள்வர்) வேளையில், அதன் வெகுமதிகள் ஒரு சிலரின் கைகளில் மட்டுமே உறுதியாக எஞ்சியிருக்கும். இந்தக் காரணத்துக்காக, பொருளாதாரம் முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் அழுத்தம் விகிதப் பொருத்தமற்றதாக இருக்கும். மேலும், தற்போதைய நிலைமை, தற்போதைய கட்டமைப்புரீதியிலான பிரச்சினைகளை ஏற்கனவே கிளறிவிட்டுள்ளது.

அபிவிருத்திக்காக பெருமளவிலான தொகைப் பணங்களை கடன்களாகப் பெறுகின்ற போதிலும், மனித அபிவிருத்தி அம்சம் என்பது, அரசாங்கத்தின் செலவு முன்னுரிமைகளில் இல்லையென்பது தெளிவு. அதனால், தற்போதைய அபிவிருத்தி தொடர்பான கடன் பெறுதல்கள் மற்றும் செலவிடுதல்களும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுடனோ அல்லது அந்த விடயத்தில், ஒரு செழிப்பான அறிவுசார் அடிப்படையிலான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலோ உண்மையில் உடனிணைந்ததாக இல்லை. புதிய கட்டுமானங்கள் மீது செலவிடுவதற்கு அரசாங்கம் மேலும் கூடுதலாக பணத்தைக் கடன் பெறுகையில், சுகாதாரம். கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்புகள் என்பன தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. அண்மைய உலக போட்டித்தன்மைச் சுட்டிகளில் (2014-2015), இலங்கை 63 ஆவது ஸ்தானத்திலிருந்து 75 ஆவது இடத்திற்கு வீழ்ச்சியடைந்தமை, இந்தக் கரிசனைகளைப் பிரதிபலிக்கின்றன. மிகப் பலவீனமான குறிக்காட்டிகள், மோசமான நிறுவனங்கள், தொழில்நுட்பத் தயார்நிலை, தொழில் சந்தை வினைத்திறன் மற்றும் புத்தாக்கம் என்பவற்றைச் சுட்டிக்காட்டின.

ஏற்கனவே, இலங்கை இந்த மனித அபிவிருத்தித் துறைகளில் மிகக் குறைந்தவொரு செலவினங்களைக் கொண்டுள்ளது. உதாரணத்துக்கு, 2012 இல் சுகாதாரத்துறையிலான அரச செலவினம் வெறுமனே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.25% ஆக, தெற்காசிய சராசரிகளுக்கு சற்றுக் கீழாகவும் மற்றும் சீனா (3.03%), வியட்நாம் (3%), மற்றும் மலேஷியா (2.17%) மற்றும் ஏனைய ஒத்த அபிவிருத்தியடையும் நாடுகளினதை விட அதிகளவிற்கு குறைவானதாகவும் உள்ளது.[9]

---

3 IMF – Transcript of press conference on the IMF Article IV Report (May 2nd, 2013)

4 IMF – Transcript of press conference on the IMF Article IV Report (May 2nd, 2013)

5 IMFPress Release No. 14/371

9 உலக வங்கி - உலக அபிவிருத்திக் குறிக்காட்டிகள்




அதேவேளை, கல்வி மீதான அரச செலவு 2012 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.72% ஆக இருந்தது, இது தெற்காசியாவிலேயே மிகக் குறைந்ததாகும் (பிராந்தியச் சராசரி 2.14%) என்பதோடு தாய்லாந்து (7.57%), மாலைதீவுகள் (5.89%), மலேஷியா (2011 இல் 5.94%), கொரியா (5.25%) மற்றும் இந்தியா (3.35%) போன்ற பிராந்திய சக நாடுகளினதையும் விடக் குவைானதாகும்.[10]




சமூகப் பாதுகாப்புகளைப் பொறுத்தவரை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூகப் பாதுகாப்புச் சுட்டியில் இலங்கையின் புள்ளிகள் அநேகமான அதன் தெற்காசிய அயல்நாடுகளை விட ஒப்பீட்டளவில் சிறந்ததாக உள்ளது. ஆனாலும், அதே வருமானம் கொண்ட குழுவின் சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் சாதாரண தரமானதாகவே அது உள்ளது. 2010 வரையாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சதவீதமாக செலவு செய்தல் 2009 இன் 3.2% இலிருந்து 2.8% க்கு வீழ்ச்சி கண்டது.[11] வீழ்ச்சியடையும் இந்தப் போக்கு ஏனைய ஒத்த குறிக்காட்டிகளுக்கும் கூட பிரயோகமாகிறது.

முதிர்ச்சியடையும் ஒரு மக்கட்தொகையுடனும் மற்றும் கோரும் தன்மையான சர்வதேசப் பொருளாதாரம், உயர் தர சுகாதார, கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்புகளை பேணுவதிலான தோல்விகள் என்பன இலங்கைக்கு கடுமையான இடர்நிலைகளை இட முடியும். இதனால், பொதுக் கொள்கைகள் மக்களின் தீவிர ஆராய்தல்களை எதிர்கொள்ளுதல் வேண்டும். முக்கியமாக, சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டவாறு, பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் பன்முகப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு, “உட்கட்டுமானம் மற்றும் மனித மூலதனம் என்பவற்றின் மீது அதிகரித்த மற்றும் நிலைபேறான மட்டங்களிலான செலவிடுதல்கள்” இலங்கைக்கு தேவை. மனித மூலதன அபிவிருத்தி (கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தரங்கள் போன்றன) மற்றும் உட்கட்டுமானம் என்பவற்றிலான குறைந்த முதலீடு, வளர்ச்சி வீழ்ச்சியடைவதால், எதிர்காலத்தில் குறைந்த வருமானங்களுக்கு இட்டுச் செல்கிறது.

மொத்தத்தில், இலங்கையின் மிகவும் முக்கிய மூல வளமான – அதன் மக்கள் மீது செலவிடுவதற்கான தவறுதல், வெறுமனே அரசாங்கக் கொள்கையொன்றின் தவறுதல் மட்டுமன்றி நாட்டுக்கான அபிவிருத்தி என்பது எதனைக் கருதுகிறது என்பதைப் பற்றிய ஒரு மோசமான புரிந்து கொள்ளுதலையும் கூட சுட்டிக்காட்டுகிறது. மதிப்புடன் கூடிய அச்சத்தை அளிக்கின்ற போதிலும், எத்தனை வீதிகள் அல்லது நெடுஞ்சாலைகளை அமைத்தாலும் அவை பலவீனமான சமூகப் பாதுகாப்பு வலைகள், பரிதாபமான ஒரு கல்வி முறை மற்றும் மோசமான சுகாதாரம் என்பவற்றைக் கொண்ட ஒரு மக்கட் தொகைக்கு ஈடுசெய்ய முடியாது. அத்தகைய நிலைமைகள் மனித நலிவடைதலுக்கு பங்களிக்க முடியும், பதிலுக்கு அது ஒரு உயர் வருமானப் பொருளாதாரத்திற்கு தன்னை புத்தாக்கம் செய்து கொள்ளும் இலங்கையின் ஆற்றலை மட்டுப்படுத்துகிறது.

> மனித மூலதனத்தில் பொருத்தமான முதலீடுகள் இல்லாமல், தேயிலை அல்லது டி-ஷேர்ட்டுக்களை கப்பலில் அனுப்புவதற்கு இலங்கை வெறுமனே சிறந்த வீதிகளை மட்டும் கட்டுகிறது. பதிலுக்கு, பொருளாதாரம், சமூக மற்றும் கலாச்சார உரிமைகளின் அத்திவாரங்களில் கட்டப்பட்ட அறிவுப் பொருளாதாரமே இலங்கைக்கு தேவையாகிறது. இது பொருள்சார்ந்த விடயங்கள் மீது கூடுதலான முதலீட்டைத் தேவைப்படுத்தும், ஆனாலும் அதன் வெகுமதிகளோ மதிப்பிட முடியாது.

**நவம் நைல்ஸ்**[12]

10 உலக வங்கி - றுழசடன னுநஎநடழிஅநவெ ஐனெஉையவழசள

11 ஆசிய அபிவிருத்தி வங்கி – ளுீஜ ஐனெநஒஇ ஐனெஉையவழசள

12 இலங்கை இளைஞர் காலநிலை நடவடிக்கை வலையமைப்புக்கான (SLYCAN) ஓர் ஆராய்ச்சி இணைப்பாளர், இலண்டன் பல்கலைக் கழக நிகழ்ச்சித் திட்டத்துக்காக உலக சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் அரசியல் எனும் விடயம் மீதான விரிவுரையாளர்

# சுற்றுலாவின் பெயரில் நில அபகரித்தல்: கற்பிட்டி தீவுச் சமூகங்கள

கற்பிட்டி மக்கள் தங்களது வாழ்வாதாரங்கள், தங்களது குடும்பங்கள், தங்களது அடிப்படை மனித உரிமைகள் மற்றும் தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு முயல்கின்றனர். இதனை அடைவதிலான பிரதான தடை, உள்;ர்வாசிகளின் கருத்துக்களை சற்றும் கவனத்தில் கொள்ளாது, கற்பிட்டித் தீவுகளில் ஒரு சுற்றுலா எழுச்சியின் கடுமையான முயற்சி ஈடுபாடாகும். ஒரு பெரும்பாலான மக்கள் தங்களுக்கு காத்திருக்கும் நிச்சயமற்ற எதிர்காலம் குறித்து அச்சத்தோடு உள்ளனர்.

> "கடந்த 70-80 வருடங்களாக நாங்கள் இங்கே வசித்து வருகிறோம். சுற்றுலாத் தேவைகளுக்காக எங்களது நிலங்கள் கையகப்படுத்தப்படும் என்ற செய்தியால் இப்பொழுது எங்கள் மக்கள் அச்சப்படுகின்றனர். அது நிகழுமாயிருந்தால், எங்களது வாழ்வாதாரங்கள் உட்பட அனைத்தையும் நாங்கள் இழந்து விடுவோம். நாங்கள் அதையிட்டு அச்சங் கொள்கிறோம். அரசாங்கம் எங்களுக்கு உதவ மாட்டாது. அவர்களிடமிருந்து ஏதேனும் உதவி எங்களுக்குத் தேவைப்பட்டால், காணிகளுக்கான 'உறுதியை' சமர்ப்பிப்பதற்கு அதிகாரிகள் எங்களை வேண்டுவர். ஆனால், இது வரை எங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு எவரும் வரவில்லை."
>
> **அசங்கா குரூஸ் - மீனவர், சின்னமுனைக்கரைத் தீவு**

கற்பிட்டிக் குடாவிலிருந்தான பல உணர்ச்சிமிக்க தனிப்பட்ட ஆட்களில் அசங்காவும் ஒருவர், அவர் தனது அடிப்படை உரிமை மதிக்கப்படும் எனவும், மற்றும் தனது நிலத்திற்கும் மற்றும் நீர் வளங்களுக்குமான அணுகுவழிகளை மீளப்பெறுவதற்கும் நம்பிக்கை கொண்டுள்ளார். இந்த நிலங்கள் அவர்களது பாரம்பரியம் மட்டுமன்றி அவர்களது வாழ்வாதாரமும் கூட என்பதினால், அவரது நம்பிக்கையை இவற்றோடு இலகுவாகத் தொடர்புபடுத்தப்பட முடியும்.

கற்பிட்டிக் குடா புத்தள மாவட்டத்தில் 14 பிரதான தீவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. அவை புத்தளம் வாவியை இந்திய சமுத்திரத்திலிருந்து வேறாக்குவதுடன் பவளப் பாறைத் தொடர்களிலிருந்து தட்டைக் கடற்கரைகள், உப்பளங்கள், கண்டல் சதுப்பு நிலங்கள், உப்புச் சதுப்புநிலங்கள் மற்றும் நீண்ட மண் கடற்கரைகள் என பன்முகப்பட்ட வாழிடங்களுடனான ஒரு கடற் காப்பகமாகவும் உள்ளது. டொல்பின்கள், கடலாமைகள் மற்றும் பவளப் பாறைகள் என்பன இந்த கடற்காப்பகத்தில் அதிகமாக உள்ளன. இந்த 14 தீவுகளும் மொத்தமாக 1672.67 ஹெக்டேர்கள் (4133.19 ஏக்கர்கள்) நிலப் பரப்பைக் கொண்டுள்ளன.

அத்தோடு, கற்பிட்டி 64,908 ஆட்களுக்கும் (2009 குடிசனப் புள்ளிவிபரம்) தாயகமாக உள்ளது. அதில் 12,967 பேர்கள் சிறிய அளவிலான மீனவர்களாவர், மற்றும் உலக உணவு ஸ்தாபன மதிப்பாய்வின் படி, பிரதேசத்திலுள்ள 25% பெண்கள் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.[1] இலங்கையின் சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயத்திற்காக ஒதுக்கப்பட்ட 15 இடங்களுள் கற்பிட்டியும் ஒன்றாகும். சுற்றுலா செயல்திட்டங்களுக்காக சுமார் 4000 ஏக்கர்கள் நிலங்களைக் கையகப்படுத்தல் உண்மையில் 2004 இல் ஓர் அமைச்சரவைத் தீர்மானத்தை அனுசரித்து ஆரம்பிக்கப்பட்டது.[2] இச்செயன்முறையின் போது, சுற்றுலாத்துறை தொடர்பான பல்வேறுபட்ட செயல் திட்டங்களுக்காக பெருமளவிலான நிலங்களை கையகப்படுத்தப்பட்டன, குறைந்தது 2,500 நிலவுரிமையாளர்கள் தங்களின் நிலங்களை இழந்தனர்.

இந்த 2,500 நிலங்களை இழந்தவர்கள், பின்வரும் சந்தேகத்திற்குரிய முறைகள் மூலமாக தங்களது நிலங்களை இழந்தனர்:

1. 2004 சுனாமி அனர்த்தத்தின் பின்னர், பிரதேசம் கைவிடப்பட்டு, சேதப்பட்டு அல்லது விற்பனைக்கான நிலையில் உள்ள, நிலங்களை எடுப்பதற்கு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியமை.
2. வாக்காளர் இடாப்பு போன்ற அரசாங்கப் பதிவுப் புத்தகங்களிலிருந்து ஆட்களின் பெயர்களை நீக்குதல்.
3. கடற்கரையில் வலைகள் காயப்போடும் இடங்கள், மற்றும் நங்கூரமிடும் இடங்கள் போன்றவற்றை கைப்பற்றுதல்.
4. தங்களது காணிகளுக்கு குடியிருப்பவர்கள் உரித்துகளைச் சமர்ப்பிப்பதை அனுமதிக்காத பல்வேறு சட்ட உரித்துரிமை "விதிகள்" மூலமாக.

இந்த நில அபகரிப்புகளின் பயனாளிகள் இராணுவம், சுற்றுலாத்துறையிலிருந்தான தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு சபை, இலங்கை சுற்றுலாச் சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற அரசாங்க நிறுவனங்களுமாகும். இந்த முதலீட்டாளர்கள் நிலங்களுக்கான உரித்தை எவ்வாறு பெற்றுக் கொண்டனர் என்பது ஒரு மர்மமாகும்.

எவ்வாறாயினும், தனது நிலத்தை மீளக்கோரும் அல்லது இழப்பீட்டைப் பெறும் அசங்காவின் நம்பிக்கை, இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுனர், அஜித் நிவாட் கப்ராலால் மறுக்கப்பட்டதுடன், அவர் பின்வருமாறு கூறினார்:

> "நாட்டின் சுற்றுலாத்துறையை நீர்கொழும்பு மீனவர்களே எதிர்க்கின்றனர். ஆனால், கற்பிட்டி மீனவர்களும் மற்றும் அங்கு சுற்றியுள்ள சமூகங்களும் மீன்பிடித் தொழிலை தாங்களாகவே கைவிட்டு சுற்றுலாத் தொழிலுடன் சந்தோஷமாக இணைந்துள்ளதுடன் சுற்றுலாவிலிருந்து கூடுதலாகச் சம்பாதிப்பதற்கும் தயாராக உள்ளனர்."



Photo: James Gordon

திரு.கப்ரால் இந்தக் கருத்துக்களை செப்டெம்பர் மாத முற்பகுதிகளில் கொழும்பில் களக் காப்புறுதி முகவர்களுடனான ஒரு சந்திப்பில் தெரிவித்தார். கற்பிட்டி மீனவர்கள் தங்களது ஒரே வாழ்வாதாரமான மீன்பிடியை தன்னிச்சையாக கைவிட்டு விட்டனர் என்ற முடிவுக்கு அவர் எவ்வாறு வந்தார் என்பது, கேள்விக்குரியது. அவர் உண்மையில் கற்பிட்டி மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களது கரிசனைகள் மற்றும் தேவைகளை மதிப்பீடு செய்தாரா? எங்களது அறிவுக்கு தெரிந்த அடிப்படையில் அப்படியானதொரு மதிப்பாய்வு மேற்கொள்ளப்படவே இல்லை.

தீர்மானம் மேற்கொள்வதில் மட்டுப்படுத்தப்பட்ட சமூக ஈடுபாட்டுக்கு மேலதிகமாக, செயல்திட்ட மதிப்பீடுகள் தொடர்பாக வெளிப்படையான தன்மை இல்லாதிருந்தது பற்றியும், முறையிடப்பட்டுள்ளது. ஒரு மாபெரும் சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு முக்கியமான இலக்காக கற்பிட்டி வரவுள்ளது பற்றி, முதலில், அவர்களுக்கு தெரிவிக்கப்படவே இல்லை.

> "சுற்றுலாச் செயல்திட்டங்களுக்கு எங்களது நிலங்களைக் கொடுக்க வேண்டாம். எங்களது காணிகளை உரிமை கோருவது பற்றி நாங்கள் அறிந்திருக்கவில்லை. இந்த விடயம் தொடர்பாக யாரும் எங்களுக்கு அறிவிக்கவில்லை."
>
> **மேரி பெர்ணான்டோ, சின்னமுனைக்கரைத் தீவு**

16 விடுதிகள்/ஹோட்டல்கள் மற்றும் அவற்றை அடைவதற்கான பாதைகள் உட்பட, பல்வேறுபட்ட நிர்மாண மற்றும் பௌதிக மாற்றங்கள் இந்த நிலங்களில் நடந்துள்ளன. மீனவர்களும் பெண்களும் இடம்பெயர்ந்துள்ளனர். கற்பிட்டி வளைகுடா, நாட்டின்

---

1 இலங்கை விபரப் பக்கம், விவசாயத்திலுள்ள பெண்கள், சுற்றாடல் மற்றும் கிராமிய உற்பத்தி, உலக உணவு ஸ்தாபனம், http://www.fao.org/Gender/Ffiles/Srl.pdf எனும் இணைய பக்கத்தில் நிடைக்கப் பெறும். செப்டெம்பர் 19, 2014 அன்று அணுகப்பட்டது.

2 mNj Mjhu %yk;> gf;fk; 10.

ஒரு செழிப்பான மீன்பிடி நீர்வளங்களில் ஒன்றாக இருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகளின் காரணத்தால் மட்டுமான தாக்கங்களின் காரணமாக, இந்த நீர்ப் பகுதி அதிகரித்தளவில் குறைந்த மீன் வளம் கொண்டதாகியுள்ளது.

உள்;ர் மீனுற்பத்திகளிலான குறைவு மீன்பிடி வருமானத்திலான வீழ்ச்சியுடன் தொடர்புபடுகிறது. சமூக மட்டத்தில், இந்த தொகைகள் அடிப்படை அத்தியாவசியங்களுக்கான ஒரு தேய்வுறும் வரவுசெலவையே குறிக்கிறது. நாட்டு மட்டத்தில், இது குறைக்கப்பட்ட வரவுசெலவுகள் மற்றும் மோசமான சேவைகளைப் பிரதிபலிக்கிறது. அத்தோடு, இது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படும் உள்ளிணைந்த அபிவிருத்தி மூலோபாயத்துடனும் முரண்படுகிறது. மேலும், கற்பிட்டிக் கருவாடு நாடு முழுவதிலும் நன்கறியப்பட்ட ஒரு கடலுணவு உற்பத்தி. இத்தீவுகளில் வருடாந்த கருவாட்டு உற்பத்தி சுமார் 250-400 மெட்ரிக் தொன்களாகும். இது தீவுச் சமூகங்களுக்கான ஒரு வருமானம் மட்டுமன்றி, தேசிய பொருளாதாரத்துக்கான ஒரு பங்களிப்புமாகும். இந்தத் தீவுகளிலான கருவாட்டு உற்பத்தி வெளிநாடுகளிலிருந்து மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான மில்லியன் கணக்கான அந்நியச் செலவாணியைக் குறைப்பதற்கும் உதவுகிறது.

தங்களது வளங்கள் மீது கற்பிட்டி மக்களால் கட்டுப்பாடு இழக்கப்படுவது இரண்டு விடயங்களைக் குறிக்கிறது – வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் உணவுச் சுயாதிபத்தியம், மற்றும், பயனான வறுமைப்படுத்தலின் அச்சுறுத்தல் மற்றும் உணவு மற்றும் போஷாக்கின் பாதுகாப்பின்மை.

எவ்வாறாயினும், எல்லாவற்றையும் இழந்துவிடவில்லை. இன்னமும், இந்த ஆட்கள் தங்களது குரலை அநீதிக்கு எதிராக எழுப்புவதற்கு கொண்டிருக்கிறார்கள்.

> “எந்தவொரு காரணத்துக்காவும் எங்கள் கிராமத்தை விட்டுப் போவதற்கு நாங்கள் தயாரில்லை. நாங்கள் எங்கே போக முடியும்? உள்ளேயுள்ள நிலங்களில் நாங்கள் போய்க் குடியேறின், எங்களால் தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபட முடியாது. அவர்களது இந்த முன்வருதலை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாரில்லை.
>
> எங்களுக்குத் தெரிந்த ஒரே தொழில் மீன்பிடி மட்டுமே, எங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கான வழிவகைகளைப் பெறுவதற்கு நாங்கள் இங்கே வசித்தல் வேண்டும். சில பேர்கள் அவர்கள் தரும் பணத்தினாலோ அல்லது பொருட்களினாலோ செல்வாக்குக்கு உட்படலாம். ஆனால், நாங்கள் மாற்றிடங்களை ஏற்றுக்கொள்வதற்குத் தயாரில்லை. எங்களை உச்சி முனையிலிருந்து பலவந்தமாக அகற்றுவதற்கு அதிகாரிகள் முயன்றால், அவர்கள் உச்சிமுனைக்கு வருவதற்கு மிக முன்னதாகவே, அவர்களை கீரிமுந்தலில் நிறுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். எங்களது எதிர்காலம் மற்றும் எங்களது பிள்ளைகளின் எதிர்காலம் என்பவற்றை அவர்களின் ஆசை வார்த்தைகளால் மயங்கி நாங்கள் இழந்துவிட முடியாது.”
>
> **திருமதி. இயூஜின் பெர்ணான்டோ – உச்சிமுனை**

> “எங்களுக்கு வேறு மாற்று வாழ்க்கை இல்லை. எங்களது வாழ்வாதாரத்தை நாங்கள் விட்டுத்தர முடியாது. இந்தத் தீவுகளின் மீன்பிடி மற்றும் மீன்பிடித் தேவைகளுடன் நாங்கள் இணைந்துள்ளோம். எங்களது வாழ்க்கைகள் இந்தத் தீவுகளுடன் பிணைந்துள்ளது.”
>
> **நிரோ‘ன் குரே, - உச்சிமுனை**

“இந்தக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு மக்களுக்கு ஒரு குரல் இல்லாத போது, ஒரு சங்க சமுதாயமாக நாங்கள் இந்த மக்களுக்கு உதவுவதற்கு முன்வருகிறோம். நில அபகரிப்பு என்பது இந்த சுற்றுலாத் தொழிலின் ஒரு தீய அம்சங்களிலொன்று, அதனால், பௌத்த பிக்குகளாகவும் மற்றும் இன்றைய சிவில் சமூகமாகவும் நாங்கள் ஒரு பலமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்,” என்று கூறினார், கற்பிட்டி, கண்டக்குழி, ஸ்ரீ சமுத்திர சாஸன விகாரையின், வணக்கத்திற்குரிய பிரதம குரு, பண்டிவெவ தியசேன தேரோ.

உண்மையில், வணக்கத்திற்குரிய. தியசேன மற்றும் ஏனைய பௌத்த பிக்குகள் பலரும் கற்பிட்டியில் முன்வந்து தங்கள் பலமான ஆட்சேபனைக் குரல்களைத் தெரிவித்தனர்.

பொது மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் அதிகார அச்சத்திற்கு மத்தியில் நடாத்தப்பட்ட போதிலும் - மதத் தலைவர்கள் உட்பட நில அபகரித்தல்களுக்கு எதிராக அதிகரிக்கும் குரல்கள், சுற்றுலாச் செயல்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் அடக்குமுறையிலான விதம் பற்றி மிகுதியாகப் பேசுகிறது.

**ஹேர்மன் குமார**[3]

3 தேசிய ஒருங்கிணைப்பாளர், தேசிய மீன்பிடி ஒருமைப்பாட்டு இயக்கம் (NAFSO)

***Published with support from CCFD***
*Send your stories, photos and cartoons to lst.escrprogram@gmail.com*
*Signed articles are the view of the writer.*

*Published in Sinhala, tamil & English and downloadable from*
*http://www.lawandsocietytrust.org/resources.html*